## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. O.S.No.154/2021.

Prosecution witness for P.W.2 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. சுபராஜன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தூத்துக்குடியில் குடியிருந்து லாரி புக்கிங் அலுவலகத்தில் வேலை செய்து வருகிறேன். சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது. வா.சா.ஆ1 கிரைய ஒப்பந்த பத்திரத்தில் நான் முதல் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளேன். வா.சா.ஆ1ல் முதல் தாளின் பின்பகுதியில் 09.07.2017 தேதியில் உள்ள மேற்குறிப்பில் நான் சாட்சி கையொப்பமிட்டுள்ளேன். வா.சா.ஆ1 கிரைய ஒப்பந்தத்தை வாதிக்கு 1ம் பிரதிவாதி 16.10.2016–ல் எழுதிக் கொடுத்தார். 49 செண்ட் நிலத்தை ரூபாய் 50 லட்சத்திற்கு கிரையம் பேசி ரூபாய் 6 லட்சம் முன்பணம் பெற்றுக் கொண்டு 1ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்தார். வா.சா.ஆ1–ஐ தயார் செய்யும்போது நான் உடனில்லை. வாதி 1ம் பிரதிவாதிக்கு பணம் கொடுக்கும்போது நான் உடனிருந்தேன். 2வது முறையாக 27.09.2017 அன்று வாதியிடமிருந்து 1ம் பிரதிவாதி ரூபாய் 26 லட்சம் பெற்றுக் கொண்டு வா.சா.ஆ1ல் முதல் தாளின் பின்பகுதியில் மேற்குறிப்பில் கையொப்பமிட்டுக் கொடுத்தார். அதில் நான் சாட்சியாக கையொப்பமிட்டேன். 09.07.2017 அன்று வாதியிடமிருந்து 1ம் பிரதிவாதி ரூபாய் 3 லட்சம் பெற்றுக் கொண்டு மேற்குறிப்பு செய்து கொடுத்தார். அதில் நான் சாட்சி கையொப்பமிட்டுள்ளேன். வா.சா.ஆ1ல் நான் முதல்

சாட்சியாக கையொப்பமிடும்போது 2ம் சாட்சியாக ராம்குமார் என்பவர் சாட்சி கையொப்பமிட்டார்.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி லாரி சர்வீசில் நான் வேலை செய்து வருகிறேன். கடந்த 2 ஆண்டுகளாக அங்கு வேலை செய்து வருகிறேன். அதற்கு முன்பு வாதியை எனக்கு தெரியாதா என்றால் தெரியும். வாதி என் உறவினர். 1, 2, 3 பிரதிவாதிகளைத் தெரியும். அவர்கள் என் உறவினர்கள். வா.சா.ஆ1ல் 14.10.2016–ல் வாதி வீட்டில் வைத்து 1ம் பிரதிவாதி பணம் வாங்கும்போது கையொப்பமிட்டேன். அன்றைய தேதியில் 1ம் பிரதிவாதி ரூபாய் 6 லட்சம் வாங்கினார். 09.07.2017ல் ரூபாய் 3 லட்சமும், 27.09.2017ல் ரூபாய் 26 லட்சமும் 1ம் பிரதிவாதி வாங்கினார். அதையும் வாதி வீட்டில் வைத்துதான் 1ம் பிரதிவாதி வாங்கினார். பணம் ரொக்கமாகத்தான் கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ1ல் உள்ள முத்திரைத்தாள் ஒப்பந்தம் போடுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பே வாங்கப்பட்டது என்றால் சரிதான். வாதி பெயரில்தான் முத்திரைத்தாள் வாங்கப்பட்டது. ஒப்பந்தம் எங்கு தயாரிக்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது. என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டதால் நான் கையொப்பமிட்டேன் என்றால் சரிதான். 2வது சாட்சி எப்போது கையொப்பமிட்டார் என்று எனக்குத் தெரியாது என்றால் அப்போதே கையொப்பமிட்டார். அவர் பெயர் ராஜ்குமார். அவர் வாதிக்கு உறவினரல்ல. வாதிக்கு தெரிந்தவர். இரண்டு மேற்குறிப்புகளிலும் நான் கையொப்பம் மட்டும் போட்டுள்ளேன். அதில் முகவரி இல்லை. முதல் முறையில் பணம் கொடுக்கும்போது ஆயிரம், ஐந்நூறு ரூபாய் தாள்களாக வாதி கொடுத்தார். இரண்டாவது முறை

மூன்றாவது முறையில் புதிய ஐந்நூறு ரூபாய் தாள்களாக கொடுத்தார். வாதி தனது பெட்ரோல் நிலையத்திலிருந்து கொண்டு வந்த இயந்திரம் மூலமாக பணம் எண்ணப்பட்டது. தாவா சொத்தின் புல எண் 10/7. அதில் உள்ள லாரி செட்டில்தான் நான் இரண்டு ஆண்டுகளாக வேலை செய்து வருகிறேன். அதனால் வாதிதான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறார். வாதி பிரதிவாதிக்கு பத்திரம் எழுதி தருவதாக பிரதிவாதியிடமிருந்து மொத்தம் ரூபாய் 47 லட்சம் வாங்கினார். அதை 1ம் பிரதிவாதிதான் வாதிக்கு கொடுத்தார். வா.சா.ஆ1 ஒப்பந்தம் என் முன்பாக எழுதப்படவில்லை என்றும், வாதி தயாரித்து வைத்திருந்த ஆவணத்தில் வாதிக்கு கேட்டுக் கொண்டதற்கிணங்க வாதியிடம் வேலை செய்பவர் என்ற முறையில் நான் கையொப்பமிட்டேன் என்றும் சொன்னால் சரிதான். வாதி சொல்லித்தான் நீதிமன்றத்திற்கு வந்தேன் என்றால் அழைப்பாணை வந்ததால் நீதிமன்றத்திற்கு வந்தேன். அழைப்பாணை சார்வு செய்வதற்கு முன்பாகவே இந்த வழக்கில் சாட்சி சொல்வதுபற்றி வாதி என்னிடம் சொல்லியிருந்தார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியை ஏமாற்றுவதற்காக வா.சா.ஆ1 தயாரிக்கப்பட்டு அதற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.09.25 18:05:38 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.